**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 13/2021

Deposition of witness for Prosecution : Pw4

Defence :

Name : Sathish
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 27.10.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான்தற்பொழுது ஆம்பூரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 மற்றும் 3 ஐ தெரியும். நான்தற்பொழுது ஆம்பூரில் வேலை பார்க்கிறேன். நான் ஓசூர் ஜேஎம்ஜே கம்பெனியில் 2012 முதல் 3 ஆண்டுகாலம் வேலை பார்த்தேன். 28.12.12 அன்று இரவு 11 மணிக்கு எங்கள் கம்பெனிக்கு லாரி வந்தது. உதிரி பாகங்களளை எடுத்து வந்தார்கள். ஆனால் திரும்ப சென்றுவிட்டது.மறுபடியும் 11.30 மணிக்கு அதே நாளில் உதிரி பாகங்கள் எங்கள் கம்பெனிக்கு வந்தது. உதிரிபாகங்களை கணக்கிடும்படி அ.சா.1 சொன்னார். நாங்கள் கணக்கீடு செய்துபொருட்களை இறக்கிவிட்டோம். வண்டிக்கு பக்கவாட்டில் அ.சா.1 ம் ஆஜர் எதிரியும் நின்று கொண்டிருந்தார்கள். நாங்கள் ஆரோக்ய 'ராஜ்பூபாலன் மற்றும் நான் பொருட்களை இறக்கினோம். பொருட்களை இறக்கிவிட்டதால் ஓட்டுநரை அ.சா.1 போக சொன்னாார். ஆஜர் எதிரி வண்டிகததவை திறந்து கத்தியை எடுத்துவந்து அ.சா.1 ஐ இடது பக்கம் கழுத்தில் வெட்டினார். நாங்கள் எதிரியை பிடிக்கனும் என்று சென்றோம்.ஆனால் அவர் மொட்டை மாடியில் ஏறி பின்பறம் குதித்து சென்றுவிட்டார். அதன் பின்பு கம்பெனி உரிமையாளருக்கு போன் செய்தோம். முதலில் இஎஸ்ஐ மருத்துவமனை ஓசூர் அழைத்து சென்றோம். அதன் பின்பு நான் வந்து விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் 2012லிருந்து 3 ஆண்டு காலம் ஜேஎம்ஜே கம்பெனியில் வேலை பார்த்தேன். சம்பவத்திற்க மறுநான் போலிசார் என்னை விசாரித்தார்கள். பேலிசார் என்னை விசாரித்த போது தற்பொழுது நீதிமன்றத்தில் சொன்ன தகவலை சொன்னேன். நான் சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். போலிசார் எழுதியதை நான் பார்க்கவில்லை. நான் சொல்லிவிட்டு வந்துவிட்டேன். போலிஸ் விசாரணையில் எதிரி மொட்டை மாடிக்கு சென்று அங்கிருந்து குதித்து ஓடியதை பற்றி நான் சொல்லவில்லை. நாங்கள் பொருட்களை இறக்கயிய பொத எதிரி இடது பக்கமும் அ.சா.1வலது பக்கமும் நின்று கொண்டிருந்தார். இரும்பு உதிரி பாகங்களை நாங்கள் இறக்கி வைத்தோம். நாங்க்ள இறக்கிய இடத்திற்கும் எதிரி நின்று கொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 10 அடி இருக்கும். சம்பவத்றிக்கு பின்பு லாரியை எதிரி விட்டு சென்றுவிட்டார். போலிசார் தான் வந்து லாரியை எடுத்து சென்றார்கள். எதிர வந்த வானத்தின் பதிவெண் டிஎன்20ஆர்2364.எங்கள் கம்பெனயில் பகல்பொழுதில் மட்டும் வாட்ச்மேன் இருந்தார். இரவில் வாட்ச்மேன் வரமாட்டார். எங்கள் கம்பெனிக்கு பொருட்கள் ஏற்றி வந்தால் அந்த ட்ரிப்சீட்டில் அ.சா.1 சீல்வைத்து கையெழுததுப்போட்டு கொடுப்பார். எதிரி பல முறை எங்கள் நிறுவனத்திற்கு பொருட்களை எடுத்து வந்துள்ளார். இரவு 1மணி,2மணிக்கு கூட பொருட்களை எடுத்து வருவார். சம்பவத்மிற்கு முன்பு பொருட்களை எடுத்து வந்து இறக்குவது எங்களுக்கும் எதிரிக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. பொருட்களை இறக்கிவிட்டு நான் மற்றும் என்னுடன் பொரூட்கள் இறக்கிய 2 பேர் ஒன்றாக இருந்தோம். அ.சா.1ம் சூப்பரைசரும் பேசி கொண்டிருந்தார். சண்டை போடும் சத்தம் கேட்டு தான் நான் போய் பார்த்தேன். எதிரி அ.சா.1 ஐ வெட்டியதாக பார்த்தாக நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வெட்டியதை பார்த்தேன். வண்டியின் முன்புறம்நடந்த சம்பவம் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றும் அ.சா.1 சொன்னதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 ,அ.சா.3 , பூபாலன் மற்றும் 2 வடமாநிலத்தாருடன் சேரந்து நான் எதிரியை அடித்து நொறுக்கினேன் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேரந்து தான் எதிரிஇயக்கி வந்த வண்டியை உடைத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1க்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.